<u>கூடுதல் மாவட்ட நீதிமன்றம், ஸ்ரீவில்லிபுத்தூர்.</u>

OS.22/2018

நாள்.05.10.2021

PW1 - முனியாண்டி

<u>பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>

12.09.2017ம் தேதி தாவா அடமானம் எனக்கு மேடோவர் ஆவதற்கு முன்பு பிரதிவாதி தமிழரசியை பார்த்திருக்கிறேனா என்று கேட்டால் அவரை நான் பார்த்திருக்கிறேன். அவரை நான் முனியசாமி வீட்டில் பார்த்திருக்கிறேன். 06.09.2017 அன்று அவரை பார்த்தேன். இந்த கடன் முனியசாமியிடமிருந்து எனக்கு மேடோவர் செய்யப்பட போகிறது என்று தமிழரசிக்கு அப்போதே தெரியும். நான், முனியசாமி மற்றும் பிரதிவாதி தமிழரசி பேசிக்கொண்ட பிறகு எனக்கு தாவா அடமானம் மேடோவர் செய்யப்பட்டது என்பதை பிராதில் குறிப்பிட்டு சொல்லவில்லை. அந்த மேடோவரின் அடிப்படையில் நான் முனியசாமிக்கு கொடுத்த தொகை <u>ரூ.9,70,000/-ஆகும்.</u> இந்த மேடோவர் வாசாஆ6ன் படி நான் 12.09.2017க்கு பின்பு பிரதிவாதியிடமிருந்து வட்டி பெற்றுக்கொள்ள வேண்டும் என்றால் அத்தகைய வாசகங்கள் அதில் இல்லை.(சாட்சி வாசாஆ6 ஆவணத்தை படித்து பார்த்து பதில் அளித்தார்). பிராதில் கேட்டுள்ள 08.04.2015 முதல் 20.03.2018 வரைக்கான காலத்திற்கான வட்டி <u>ரூ.3,43,380/</u>- எனக்கு கிடைக்ககூடியது அல்ல என்றால் சரியல்ல. நான் மேடோவர் செய்யப்பட்ட காலத்திற்கு முற்பட்ட 2015லிருந்து வட்டி கேட்டு தாக்கல் செய்தது தவறு என்றால் சரிதான். வாசாஆ2, முதல் வாசாஆ5 வரையுள்ள ஆவணங்களின் படி மேற்படி கடனுக்கான வட்டி எனக்கு மேடோவர் செய்த முனியசாமிக்கு வரவாகியுள்ளதாக காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். கடந்த 12.07.2016ம் தேதி அசல் கடன் தொகை <u>ரூ.9,20,000/</u>- இருந்த சமயம் அசல் வகையில் <u>ரூ.4,20,000/-ம்</u> பிரதிவாதியிடமிருந்து பெற்றுக்கொண்டு அதற்கு முனியசாமி என்ற ராஜு பிரதிவாதியிடம் ரசீது கொடுத்துள்ளார் என்றால் பொய். அதனால் முனியசாமி என்ற ராஜ்

எனக்கு மேடோவர் செய்வது என்றால் ரூ.5,00,000/-க்கு மட்டுமே செய்திருக்க முடியும் என்பதும், பிரதிவாதியிடமிருந்து பணம் பறிக்க நானும், முனியசாமியும் ரூ.9,70,000/-க்கு மேடோவர் செய்திருப்பது தவறு என்றால் சரியல்ல. வாசாஆ6 பத்திரத்தை நானும், முனியசாமி என்ற ராஜீம் சேர்ந்து அதிக தொகை போட்டு உற்பத்தி செய்தோம் என்றால் சரியல்ல. ரூ.4,20,000/-ம் செலுத்திவிட்டதாக பிரதிவாதி தனது பதில் உரையில் சொல்லியுள்ளார் என்பது எனக்கு தெரியும். இது சம்மந்தமாக நான் பதில் உரை தாக்கல் செய்த பின்பு முனியசாமியிடமோ அல்லது அவர் குடும்பத்தாரிடமோ கேட்டவில்லை. பிரதிவாதி ரூ.4,20,000/-த்தை முனியசாமியிடம் செலுத்திவிட்டார் என்பதை நன்கு அறிந்து கொண்டு அதிக தொகையுடன் வாசாஆ6யை தயார் செய்தேன் என்று சொல்வதை நான் மறுக்கிறேன். நான் வழக்கில் கோரியவாறு அசலும், வட்டியும் செலுத்த பிரதிவாதி கடமைப்பட்டவர் அல்ல என்றால் சரியல்ல.